சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. 96/2013

பெயர்: சுப்பிரமணியன் பி.வா.சா.1 தேதி **06.02.2026**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் தகப்பனார் பெயர் ராஜலிங்கம். அவரின் தகப்பனார் பெயர் ஆண்டி (எ) ஆண்டியப்பன். அவரை ஆண்டி முத்துராஜா என்றும் அழைப்பார்கள். எனது தகப்பனாரின் உடன் பிறந்த இருவருமே இறந்துபோய்விட்டார்கள். எனது அப்பா 2007-ம்ஆண்டே இறந்துபோய்விட்டார். எனது தாத்தாவான ஆண்டி (எ) ஆண்டியப்பன் எப்பொழுது இறந்தார் என்றால் எனக்கு 5 வயது இருக்கும் போதே இறந்துவிட்டார். எனது தாத்தாவிற்கு சொந்த ஊர் மேட்டு மகாதானபுரம். எனது தாத்தாவிற்கு சொத்துக்கள் இருந்ததா என்றால் இருந்தது. ஆனால், அது பூர்வீக சொத்து இல்லை. எனது தாத்தா உயிருடன் இருந் தகாலக்கட்டத்தில் அவரின் 3 மகன்களுக்கு சொத்துக்களை பிரித்து கொடுத்தார் என்றால் இல்லை. எனது தாத்தாவிற்கு மேலே சொன்ன ஆண் மக்களை தவிர சிறும்பாயி என்ற மகளும் உண்டு. அவருக்கு சொத்து எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் தெரியாது. மேற்படி மேலே சொன்ன எனது அத்தை எங்கு உள்ளார் என்றால் மேட்டுமகாதானபுரத்தில் இருந்து இறந்துபோய்விட்டார். எனது தாத்தா ஆண்டி இறந்து எவ்வளவு நாட்கள் கழித்து மேற்படி ஆண்டியின் வாரிசுகள் சொத்துக்களை பிரித்தார்கள் என்றால் மேற்படி ஆண்டி இறந்து 15 ஆண்டுகள் கழித்து வாய்மொழியாக பிரித்தார்கள். அவ்வாறு வாய்மொழியாக பாகம் பிரித்ததற்கு பின்னிட்டு அவரவர்கள் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். ஆனால், கூட்டுப்பட்டாவாகத் தான் உள்ளது. (வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.02.06 14:47:58 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.